
திருவள்ளுவர் ஆண்டு 2038

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 1 சனவரி-08



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| முனைவர் ஆ. முத்துமாணிக்கம் எம்.ஏ.,பி.எச்.டி., கல்வியியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 1
*சனவரி* 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2038




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

# பொருளடக்கம்


கட்டிட அடிக்கல் நாட்டு விழா 4

மாணிக்கவாசகர் பெரும்புலவர் ப. அரங்கசாமி 6

பாரதி என்ற மானுடம் க. சி.அகமுடைநம்பி 9

குரவை இரா. சதாசிவம் 27
செந்தமிழ் ஆசிரியர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

நூலாராய்ச்சி (கம்பராமாயணம்) பொ. பாண்டித்துரை 31

இருட்டறையில் - ஏதில் பிணம் 37
முனைவர். பேராசிரியர் கு. ஞானசம்பந்தன்

# இதழ்மணம்

## நாடாளுமன்ற உறுப்பினர் நிதி— இரா.சண்முகசுந்தரம் வருகை கருத்தரங்கக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா:—

மதுரை தமிழ்ச்சங்கத்திற்கு இன்றியமையாத தேவை கருத்தரங்கம். 27-12-2007 அன்று நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நிதியிலிருந்து அறிஞர் இரா.சண்முக சுந்தரம் எம்.பி.அவர்கள் பத்து லட்சம் ரூபாயும் கணினி மைய விரிவாகத்திற்கு ரூபாய் மூன்று லட்சமும் வழங்கித் தமிழ்ச்சங்கத்திற்கு புதுப்பொலிவை ஏற்படுத்தியுள்ளார். கணினி மையத்தைத் திறந்து வைத்துத்தமிழ் அரங்கிற்கு அடிக்கல் நாட்டுவித்து உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். மன்ற மாசற்ற சில சொற்களில் விழுமிய செய்திகளை மாணவர்களிடையே எடுத்துரைத்தார்.

சங்கம், பாற்கர சேதுபதி, பாண்டித்துரைத்தேவர் இருவருடைய காலத்தில் தமிழ் வளர்க்கத்தமிழ்க் கல்லூரியும், தமிழைப் பாதுகாக்கப் பாண்டியன் நூல் நிலையமும், தமிழ் பரப்பச் செந்தமிழ் இதழும் நிலைபேறுடைய வகையில் நிறுவப்பட்டன. அக்காலத்தில் தோன்றிய புலவராற்றுப்படை என்னும் நூல்,

“பெரும் புலவர் மருங்கமர
நிலைபயிலுங் கலைபயிலிய
தவமலியு மவர் நடுவண்
கருங்கடலிற் செஞ்ஞாயிறும்
பொரத் தலைமை கொளத் தவிசில்
விரைப்பாண்டித் துரைத் தேவன்
ஆற்றல்சால் சிறப்பின் ஆங்குவீற்றிருக்குங்
சங்க மண்டபம் காண்பீர்”, என

மதுரைச் சங்கத்தின் தமிழரங்கு என்னும் வித்வசபை சான்றோர் அரங்காகப் போற்றப்படுகிறது.

பாண்டித்துரைத் தேவர் புலவர் அவையைத் தலைமையேற்று வீற்றிருந்த சங்கமண்டபம் புலவரால் போற்றப்படுகிறது. காலப்போக்கில் வித்வசபை போற்றுவாறின்றிப் போயிற்று. மீண்டும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வித்வசபை தோன்றும் வகையில் "தமிழரங்கம்" ஒன்று அமைத்தற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சண்முக சுந்தரம் பத்து லட்சம் ரூபாய் வழங்கி வித்திட்டிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்த்த அருஞ்செயலாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் தமது கட்சி சார்ந்த உறுப்பினர்களையும் தம்மைப் போலத் தமிழ்ப்பணியாற்றிட வழிநடத்தும் இவ்வரிய செயல் போற்றுதற்குரியதாகும். அப்பெரியார் தமிழ், தமிழர்,தமிழ்நாடு என்று அயராது ஆற்றிவரும் அரிய பல செயல்களுக்கு இடையே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கல்வி சார்ந்த பல்வேறு தமிழ் ஆராய்ச்சி இருக்கைகள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் ஏற்படுத்தி அதற்குரிய நிதி உதவியளித்துத் தமிழ்ச்சங்கத்தை அதன் நோக்கம் மாண்புறும் வகையில் தமிழ் அறிஞர்களை எடுத்துச் செல்லவேண்டும் என்று இந்த நேரத்தில் "செந்தமிழ்" தன்வேண்டுதலை முன் வைக்கிறது.

மதுரை மாநகரின் வரலாற்றோடும் தமிழர் வரலாற்றோடும் நீக்க மற நிறைந்திருப்பது மதுரைத் தமிழ்ச் சங்கம். அதன் நூற்றாண்டு விழா தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுடைய தலைமையில் நடைபெறுவதே மாட்சியுடையதாகும்.

முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவில் தலைமையேற்று தமிழ் மக்களை மேலும் தமிழ்த் தொண்டாற்ற வழி நடத்த வேண்டும் என்று வேண்டுகிறோம்.

# மாணிக்கவாசக!

மூத்ததமிழறிஞர் பெரும்புலவர் **ப. அரங்கசாமி**
2112,புதுத்தெரு, லால்குடி – 621 601

## அறுசீர் விருத்தப்பா

*பொன்னம் பலத்தில் பறைமுழக்கிப்*
*புவியில் தென்னந் திசைநோக்கித்*
*தன்னந் தனியனாய் ஞானநடம்*
*தாம் தீம் தையென ஆடுகிற*
*முன்னை முழுமுதற் பொருளானை*
*முற்படு வாச்சிய மாய்ச்சுட்டிச்*
*சொன்ன வாசகப் பாடல்களில்*
*சிலவாம் ஐயம் தெளிவிப்பாய்.*

## தரவு கொச்சக் கலிப்பா

2. அம்பலத்தே ஆடுகிற அருளாளன் தில்லையில்
அம்பலத்துப் பொதுவிலுனை வருகவென அழைத்தாங்கே
நும்பிறவி நீக்கியதை நுவன்றனைநீ கீர்த்தியினில்
எம்முள்ளம் கொண்டாய்நீ எம்மான்மணி வாசகனே.

3. தெய்வத்திரு வாக்காகத் தெளிந்துரை வாசகத்தில்
மெய்ச்சைவத் தத்துவமும் சிவத்துவமும் கூறினையே
ஐயன்நீ சொன்னவற்றுள் அமைந்தசில உட்பொருளை
மையலறத் தெளிவிக்க மன்றாடி வேண்டுவனே

4. ஆகமம் ஆகிநின்றும் ஆகமம் தோற்றுவித்தும்
ஆகமம் வாங்கியும் என்றுரைத்தாய் ஐயன்நீ
ஆகமத்தின் பொருளாக அறிஞர்பலர் பலசொல்வர்
ஆகமத்தின் மெய்ப்பொருளை யானறிய உணர்த்துவையே.

5. ஊனையென நாடகமும் ஞானமென நாடகமும்
ஆனவிரு நாடகங்கள் கூறினையே அவையாவை
ஞானநடத் தரசவனின் பாதச்சிலம் பொலிகேட்டாய்
யானுமந்த ஒலிகேட்க இயலுமெனின் அருள்வாயே.

6. அணங்கோ(டு) அம்பலவன் ஆடினதாய்க் கூறினையே
அணங்கவள்தான் யாரேயோ ஆடியதும் எதற்காக
கணங்கொண்ட மலைமகளைக் கண்ணுதலான் மணங்கொள்ள
இணங்கியதன் காரணத்தை இயம்புவையோ ஐயாநீ

7. என்னால் அறியாத பதந்தந்தாய் என்றாயே
உன்னால் அறியாத அந்தபதம் என்னையோ
பன்னாள் பணிந்தேத்தும் பழவடியார் என்றனையே
சொன்ன பழவடியார் அடையாளம் சொல்வாயே.

8. ஆலமுண்டான் தன்னடியார் அனைவர்க்கும் அருள்காட்டி
மூலபண் டாரம்மிக வழங்குகிறான் என்றனையே
மூலபண் டாரந்தான் இன்னதெனக் கூறிடினே
காலமுண் டாகயான் கடிதோடிப் பெறுவேனே.

9. இந்திர ஞாலமென ஈரிடத்தில் கூறினையே
இந்திர ஞாலந்தான் இன்னதென இயம்பிடுவாய்
சந்திரனைத் தேய்யத்ததென ஐயாநீ சாற்றினையே
சந்திரனைத் தேய்த்தவர்யார் சந்திரன்செய் தவறென்னோ.

10. பல்லோரும் காணவுன்றன் பசுபாசம் அறுத்ததென
நல்லோய்நீ நவின்றனையே பசுபாசம் அறுத்திடுதல்
எல்லோர்க்கும் கிட்டிடுமோ பசுபாசத் தத்துவத்தை
பல்லோரும் அறிந்திடவே பகர்ந்திடுவாய் பெருமானே.

11. பரானு பவமென்றும் சிவானு பவமென்றும்
உரைத்தனையே அவ்விரண்டை யானறிய விளக்குவையோ
வரையுயர்ந்த கழுக்குன்றில் வாமலையாள் பாகத்தன்
திருக்கோலம் காட்டநீ கண்டஅந்தக் கோலமென்னோ.

12. ஓங்காரத்(து) உட்பொருளாய் ஐயனுனக்(கு) அருளியதை
யாங்களும் அறிந்திடவே அருள்கூர்ந்து கூறுவையோ
ஓங்கிருள்சூழ் சுடுகாட்டில் கழுதுடன் ஆடினனே
ஆங்கனம் ஆடியதன் காரணந்தான் என்னையோ.

13. சிவபுரத்துள் மணிக்கதவம் திறந்ததுமே செல்வமென
சிவனடியார் கூட்டத்தைச் சேர்ந்துவர அழைத்தனையே
சிவபுரத்துள் அடியேனும் செல்வதற்கு நெறியதனை
உவகையுடன் உரைத்திடுவாய் உம்பர்தொழும் வாசகனே.

14. உடம்பையிடங் கொண்டவுயிர் ஆன்மாஎன் றிரண்டுள்ளே
உடம்பழிந்த பின்னிறைவன் அடியடைதல் எதுவேயோ
அடைவதுயிர் என்பர்சிலர் ஆன்மாவே என்பர்சிலர்
திடஞான வாசகனே தெளிவிப்பாய் எளியனையே.

15. வாதவூர் கோவுன்னை வார்சடையன் ஆட்கொள்ள
மாதவத்துக் குருவாக மரத்தடியில் அமர்ந்தனன்காண்
நாதன்நின் வாசகத்தை நனிகேட்டே அருள்வழங்க
ஓதநதிக் கரையதனில் உடம்பிலடி பட்டனனே.

**குறிப்பு**

பாடல்களில் அடங்கிய செய்திகள் இடம்பெற்ற திருவாசகப் பாடல்கள்

1. திருவாசகம் கீர்த்தித் திருவகவல் அடிகள் 127–129; தெள்ளேணம் – 7.
2. சிவபுராணம் அடி –4; கீர்த்தித் திருவகவல் அடிகள் 10, 18.
3. ஆனந்தாதீதம் பாடல் – 5 ; கீர்த்தித் திருவகவல் அடிகள் 52–53.
4. பூவல்லி – பாடல் – 7 ; சாழல் பாடல்கள் 9,13
5. ஆனந்தமாலை பாடல்–2
6. திருப்பாண்டிப் பதிகம் பாடல் – 5
7. கீர்த்தித் திருவகவல் அடிகள் 43, 94 ; திருவம்மானை பாடல் 15
8. கண்டபத்து பாடல்கள் 4,7
9. திருப்படையாட்சி பாடல்கள் 7,8; குயில் பத்து – 9
10. அச்சோப்பதிகம் – 7;
11. குயிற்பத்துபாடல் 3; யாத்திரைப்பத்து 5,6,8 கோயில் திருப்பதிகம்–2
12. அச்சோப்பதிகம் –7; மெய்யுணர்தல் பாடல்–7
13. யாத்திரை–8; சிவபுரம் யாத்திரை 5,6,8; தசாங்கம்–3; ஆசைப்பத்து–9; வாழாபத்து–1–10
14. திடஞானம் – உறுதியான, தெளிந்த அறிவு
15. ஓதம் – வெள்ளம், ஓதிக்கரை – வெள்ளம் ஓடும் வைகையாற்றங்கரை (பிட்டுக்கு சொக்கநாதன் மண்சுமந்த வரலாறு)

# பாரதி என்ற மானுடம்

– க.சி. அகமுடைநம்பி

பாரதியார் ஓர் அருங்கவிஞர், சிறந்த எழுத்தாளர், பன்மொழிப்புலவர், நல்ல மொழி பெயர்ப்பாளர், பத்திரிகையாளர் என்று பல பரிமாணங்களைக் கொண்டவர். பாரதியின் கவிதைகளையும், கட்டுரைகளையும் ஆழ்ந்து படிக்கின்ற போது, அவர் ஓர் இயற்கைக் கவிஞர், தேசிய உணர்வூட்டிய உணர்ச்சிக் கவிஞர், ஒருமை நெறி போற்றிய அத்வைத ஞானி, இசைஞானம் பெற்ற இனிய பாடகர் என்றவாறு, அவருடைய பரந்துபட்ட பரிமாணங்களையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

அத்துடன் மானுடம் போற்றிய மிக உயர்ந்த மனிதநேயர் பாரதி என்பதை நம்மில் பலர் அறியாமலிருக்கிறோம். உலகத்துப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி, அவற்றுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாதது போல் இருந்துகொண்டு, அதிகார முகட்டில் உள்ளவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்று வாழுகின்ற பல கவிஞர்களைப் போலன்றி, உலகப் பிரச்சினைகளையெல்லாம் தம்முடையனவாகக் கொண்டு அக்கினிக் குஞ்சாகத் திகழ்ந்தவர் பாரதியார்.

*"நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்*
*நானி லத்தவர் மேனிலை எய்தவும்*
*பாட்டி லேதனி இன்பத்தை நாட்டவும்*
*பண்ணி லேகளி கூட்டவும் வேண்டிநான்*
*மூட்டும் அன்புக் கனலொடு வாணியை*
*முன்னு கின்ற பொழுதில் எலாம்குரல்*
*காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்*
*கவிதை யாவும் தனக்கெனக் கேட்கிறாள்"*

என்றவாறு, சமுதாய முன்னேற்றமே இவருடைய பாடல்களில் பாடுபொருளாவதைக் காண்கிறோம்.

தவமும் யோகமும் கூடப் பிறர்க்கு உதவுகின்ற முறையில் வாழ்வதேயாகும் என்று பாரதியார் புதுமையான முறையில் மனிதநேயத்தை வரையறை செய்கிறார்.

*"உற்றவர் நாட்டவர் ஊரார் – இவர்க்கு*
*உண்மைகள் கூறி இனியன செய்தல்*
*நற்றவம் ஆவது கண்டோம் – இதில்*
*நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை"*

*"பக்கத் திருப்பவர் துன்பம் – தன்னைப்*
*பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தி*
*ஒக்கத் திருந்தி உலகோர் – நலம்*
*உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி"*

பாரதியின் மனித நேயம் அன்பின் வழிப்பட்டது. அன்பு என்ற மானுடம் அவர் உள்ளத்தில் நீங்காமல் நிலை பெற்றிருக்கும். "உலகத்துயர் யாவும் அன்பினில் அகலும் என்று சொல்லி உலகை ஆளுமை செய்த புத்தன் மொழி எங்கள் அன்னை மொழியாம்" என்று பெருமிதம் கொள்வார் பாரதி.

"பாம்பைப் பழக்கி வைக்கும் திறமை அன்புக்குண்டு. பாம்பினிடத்தில் கருணை செய்யும் ஞானியைப் பாம்பு கடிக்காது. லோகோபகாரத்தைக் கருதி அந்த ஞானி மனதிலே அன்புடன் அந்தப் பாம்பைக் கோபித்தால், அது அவ்விடம் விட்டு போய்விடும்" என்று பாரதி எழுதுகிறார்.

*"அன்பென்று கொட்டு முரசே–அதில்*
*ஆக்கமுண் டாமென்று கொட்டு*
*துன்பங்கள் யாவுமே போகும்–வெறும்*
*சூதுப் பிரிவினைகள் போனால்*
*அன்பென்று கொட்டு முரசே– மக்கள்*
*அத்தனை பேரும் நிகராம்*
*இன்பங்கள் யாவும் பெருகும் – இங்கு*
*யாவரும் ஒன்றென்று கொண்டால்"*

என்று அன்பு முரசு கொட்டுகிறார்.

அன்றையப் புதுச்சேரியில் "புஷ்"வண்டி ஒரு முக்கியமான நகர் வாகனம். ரிக்ஷா வண்டியைப் போன்றது. பெரும்பாலும் புஷ் வண்டிகளுக்கு நான்கு சக்கரங்கள் இருக்கும். சிலவற்றுக்கு மூன்று சக்கரங்கள். வண்டியைப் பின்னாலிருந்து ஒருவர் தள்ளுவார். தள்ளுபவர் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினராக இருப்பார்.

பாரதியார் வீட்டிலிருந்து வெளியே புறப்படுகிறார் என்று தெரிந்தால் போதும். அவர் வீட்டுக்கு முன்பாக ஒரு "புஷ்" வந்து நின்றுவிடும். கூலி பேச மாட்டார்கள். கேட்கவும் மாட்டார்கள். போய்ச் சேர வேண்டிய இடத்தைச் சென்றடைந்ததும் பாரதியார் வாடகைப் பணம் கொடுக்க முற்படுவார். வண்டிக்காரர் வாங்க மாட்டார். "என்னத்துக்குங்க எனக்குக் காசு" என்பார். "ஏன் ரூபாய் வேணுமா ?" என்று சொல்லிச் சிரிப்பார் பாரதியார். எதுக்குங்க, ரூபாய் எல்லாம் ?".

தள்ளுவண்டிக்காரர் வேண்டுவது பாரதியார் தோளில் கிடக்கும் துணியைத் தான். அது பட்டாக இருந்தாலும் சரி, கிழிந்துவிட்ட அங்கவஸ்திரமானாலும் சரி, சரிகைத் துப்பட்டாவாக இருந்தாலும் சரி, அதை எடுத்து வண்டிக்காரரிடம் கொடுத்து விடுவார். அந்த துணியை யாராவது ஒரு நண்பர் பாரதியாருக்குப் புதிதாக வாங்கிக் கொடுத்திருப்பார். பெரும்பாலும் அவர் துணிகளை விலை கொடுத்து வாங்குவதில்லை. பெறுவதைத் தானே வைத்துக் கொள்ளவும் மாட்டார். எளியோர்க்கு அளித்துவிடுவார்.

பாரதியார் புதுச்சேரியில், தெருவில் நடந்து செல்கிறார் என்றால், பயபக்தியுடன் பலர், ஆங்காங்கு நின்றுகொண்டு அவரை வணங்குவார்கள். வணங்குவது யாராக இருந்தாலும், நடந்து கொண்டிருக்கும் பாரதியார் அப்படியே நின்றுவிடுவார். தம்முடைய இரண்டு கைகளையும் ஒன்றாய்ப் பொருத்தி, முகத்தைத் தொடுமாறு வைத்துக் கொண்டு, வணங்குபவரைக் கும்பிடுவார்.

பாரதியாரின் ஆளுமைப் பொலிவு காரணமா, உணர்ச்சி ததும்பும் அவருடைய பாடல்கள் காரணமா, அவற்றை, அவரே பாடி எழுப்புகின்ற தேமதுரத் தமிழோசை காரணமா, அறியோம். பாரதியாருக்கு, அவர் அகதியாக அடைக்கலமாகிய புதுச்சேரியின் மக்கள் காண்பித்த மதிப்பும் மரியாதையும் சாதாரணப் புரிதலுக்கு வசப்படாத ஒன்றாகும்.

சிறிதே பைத்தியம் என்று சொல்லத் தக்கவாறு சித்தப்பிரமையுடன் ஒரு பையன் பாரதியின் பார்வைக்கு வந்தான். அவன் அதிகமாக உளறுவதில்லை. மௌனமாக இருந்து கொள்வான். அவன் மீது பாரதியாருக்கு கழிவிரக்கம் ஏற்பட்டது. சித்தப் பிரமையிலிருந்து அவனை எப்படியாவது விடுவித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டார். பைத்தியம் என்பது மனத்தளவில் நேர்ந்துள்ள ஒரு கோளாறு தானே, பார்த்துக் கொள்ளலாம் என்றாராம் – அருகிலிருந்த வ.ரா. (வ.ராமசாமி ஐயங்கார்) விவரிக்கிறார்:

பெரும்பாலான பொழுதுகளில் அந்தப் பையனைப் பாரதியார் தொட்டுத் தொட்டுப் பேசுவாராம். பழவகைகளைத் தாமே உறித்து அவனுக்குக் கொடுப்பாராம். சில வேளைகளில் அவனுக்கு ஊட்டவும் செய்வாராம். இரவில் தம்முடன் பக்கத்திலேயே அவனைப் படுக்க வைத்துக் கொள்வாராம். கொஞ்சுகின்றாற் போல் அவனை, என்ன கண்ணு, என்ன ராசா? என்று விளிப்பாராம். அவனுக்கு அரச மரியாதையாம்.

இவ்வாறு ஒரு மாதத்துக்கு மேல் அன்புப் பொழிவுடன் கூடிய அச்செயல்முறை தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. என்ன வியப்பு! பையனுடைய சித்தப்பிரமை மெல்ல மெல்ல அகன்றது. அவன் நன்றாகப் பேசவும் பழகவும் முற்பட்டான். பாரதியாருக்கோ கழிபேருவகை. அவனுடைய பெற்றோர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். பாரதியாரின் கால்களில் விழுந்து வணங்கினார்கள்.

பாரதியின் வற்றாத அன்பும் அரவணைப்பும் அந்தப் பையனின் சித்தப் பிரமையை அகற்றியது என்பதுதான் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அன்பின் ஆற்றலை வெளிக்கொணர்வது குறித்த ஒரு செயல்விளக்கமாக (Demonstration) இதனைப் பதிவு செய்துகொள்ளலாம்.

**சாதி வேறுபாடுகளுக்கு எதிரானவர்**

***"ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்***
***ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்***
***வேதிய ராயினும் ஒன்றே – அன்றி***
***வேறு குலத்தின ராயினும் ஒன்றே"***

என்றும்,

*"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே*
*தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்*
*நீதி நெறியினின்று பிறர்க்குதவும்*
*நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்"*

என்றும் பாடிய பாரதியார், உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பேதம் தொலைய வேண்டும் என்ற உணர்வுடன் பாடியும் எழுதியும் வந்தார். அவரது பேதமற்ற வாழ்வு முறைகளாலும் பிறர்க்கே உழைக்கும் பெரும்போக்கினாலும் பித்தர் என்ற ஏச்சுக்கு இலக்கானவர். சாதி தொலைந்தாலன்றி. இந்த நாட்டுக்கு விடிவே இல்லை என்பதில் அசைக்க முடியாத உறுதியுடையவர்.

பாரதியார் தம் இல்லத்திலேயே ஓமம் வளர்த்து வேத மந்திரம் ஓதச் செய்து, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கனகலிங்கம் என்பவருக்குப் பூணூல் அணிவித்து, பாரதியாரே காயத்திரி மந்திரம் உபதேசம் செய்த நிகழ்ச்சி, இந்திய வரலாற்றிலேயே ஒரு புரட்சியின் சின்னம் என்று சொல்லலாம்.

மந்திர உபதேசமெல்லாம் முடிந்த பிறகு "*கனகலிங்கம்! நீ யாரைக் கண்டும் பயப்படாதே. யார் உனக்குப் பூணூல் போட்டு வைக்கத் துணிந்தது என்று உன்னை யாராவது கேட்டால், பாரதி போட்டு வைத்தான் என்று அதட்டியே பதில் சொல். எது நேர்ந்தாலும் சரி இந்தப் பூணூலை மட்டும் எடுத்து விடாதே*" என்று பாரதியார் கனகலிங்கத்துக்கு அறிவுறுத்தினார்.

1904–ம் ஆண்டு சிவசங்கரன் நாயர் என்பவர் தமது சொற்பொழிவு ஒன்றில் பிரிட்டிஷ் ஆட்சி முறை பற்றியும் இந்திய சாதி முறைகளின் குறைகள் பற்றியும் குறிப்பிட்டுப் பேசினார். அதற்கு ஓர் அன்பர் இந்து நாளிதழில் மறுப்பு எழுதினார். சங்கரன் நாயரின் கருத்தை ஆதரித்து பாரதியார் அதே இந்து பத்திரிகையில் (ஆங்கிலத்தில்) எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

*"மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதி சொன்னது – சுற்றி வளைத்துக் குழப்பத்திற்கு இடமில்லாமல் தெளிவாகச் சொல்ல*

*வேண்டுமென்றால் – இதுதான்: இந்த நாட்டவன் என்ற நாட்டுரிமை உணர்வு இல்லாமல் அரசியல் விடுதலை இருக்க முடியாது. எங்கே சாதி அமைப்பு முறை பரவி இருக்கிறதோ, அங்கே நாட்டுரிமை உணர்வு இருக்காது. (குற்றம் கண்டுபிடிக்கிற அதிமேதாவி ஆராய்ச்சியாளர்கள் சிலர், உலகத்திலுள்ள எல்லா மனித சமுதாயங்களிலும் சாதி அமைப்பு முறை உள்ளது தான்'* என்று நம்மை நம்பும்படி வேண்டுவார்கள்.)

*இந்தச் சாதி அமைப்பு முறை இருக்கிறதே, அது அதி ஆச்சரியமானது! ஏனென்றால், இது பறையர் வகுப்பைச் சேர்ந்த ஒருவன் பெருங் கொடையாளியாக இருந்த போதிலும் அவன் பிராமணத் தரகனை விடக் கீழானவன், தாழ்ந்தவன் என்றே வைத்து நடக்கிறது. இங்கிலாந்தில் உரிய தகுதிகள் வாய்க்கப் பெற்ற, அந்நாட்டுக் குடிமகனான செருப்புத் தைப்பவரின் மகன் ஒருவன் பிரதம மந்திரியாவதற்கு எவ்விதத் தடைகளும் கிடையாதென்பதைப் பற்றி அங்குள்ள மக்களில் எவனும் ஐயப்படமாட்டான்.*

*சமஸ்கிருத சாஸ்திரங்களில் ஈடு இணையற்ற அறிவும், விழுமிய ஒழுக்கப் பண்பும், பக்தியும் கொண்ட ஒருவன் சிருங்கேரி மடத்தின் பீடாதிபதியாக வர முடியும் என இந்தியாவில் எவனாவது நம்பினால், அது தேசத் துரோகமாகக் கருதப்படும் அல்லவா? (சூத்திரனே வரமுடியாது என்றால், பஞ்சமனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.) மக்கள் ஏன் வேண்டுமென்றே தம் கண்களை இறுக மூடிக் கொள்கிறார்கள்? மலைக்கும் மண் புற்றுக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் கண்டுணர மறுப்பது ஏன்? மகத்தான இங்கிலாந்துப் பேரரசு எங்கே? அந்தோ? இந்தியா எங்கே?*

*சமுதாய சீர்திருத்தம் சாராத அரசியல் சீர்திருத்தம் என்பது வெறும் கனவும் கற்பனையுமே ஆகும். ஏனெனில், அரசியல் சுதந்திரம் என்ன என்பதைச் சமூக அடிமைகள் உண்மையாகவே புரிந்து கொள்ள மாட்டார்கள்"*

– ("ஓம் சக்தி," நவம்பர் 2007, வா.செ. குழந்தைசாமியின் கட்டுரையிலிருந்து)

பாரதியார் மரணமடைவதற்கு முன் இறுதியாக பாடிய "பாரத சமுதாயம் வாழ்கவே" என்ற பாடலில்,

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!"

என்று பாடி மகிழ்ந்தார்.

பாரதி பிராமண ஆதிக்கத்திற்கு எதிராக நின்று வாழ்க்கை முழுவதும் ஒப்புரவு நெறியைக் கடைப்பிடித்தவராக இருந்து வந்தார். வருண வகுப்பினிடையிலும் மனித நேயத்தின் உயர்நிலையில் நின்றவாறே சிந்திக்கலானார்.

கடையத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் நடத்திய சத்தியில் கலந்து கொண்டதற்காக, பாரதி தன் சாதியினரால் நீக்கி வைக்கப்பட்டார் என்பது வரலாறு. வருண வேறுபாடு, சாதி வேறுபாடு பாராதவர் பாரதி. அவருடைய பிராமணிய எதிர்ப்பும் ஐயத்திற்கு இடமில்லாதது.

"நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் – இந்த
நாட்டினில் இல்லை குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தின ரேனும் – உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்."

என்றும்,

"சூத்திரற்கோர் நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறோர் நீதி என்று
சாத்திரம் சொல்லு மாயின்
சாத்திரமன்று அது சதியென்று கண்டீர்"

என்றும் முழங்குகின்ற பாரதியை ஒரு மானுடன் என்பதாகத் தான் பார்க்க வேண்டும். அவர் பிறந்த சமூகத்தோடு இணைத்துப் பார்த்தால், அவர் தன் வாழ்வெல்லாம் போற்றிப் பராமரித்து வந்த மனித நேயம் நம் கருத்திற்கு வராமலே போய்விடும்.

ஆண் – பெண் சமத்துவத்தைப் போற்றுகின்ற இயல்பு பாரதியாரிடம் இயற்கையாக அமைந்திருந்தது. சுவாமி விவேகானந்தரின் பக்தையாக இருந்த நிவேதிதா தேவியைச் சந்தித்த பின் பெற்ற உள்ளொளியால் அவர் தேவி உபாசகராகவே ஆகிவிட்டார் என்று சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் போன்ற சான்றோர்கள் தெரிவித்துள்ளனர். நிவேதிதாவைச் சந்தித்தது குறித்து பாரதியாரே கூறுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் சம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி உபதேசம் புரிந்தருளிய குருவின் சரணங்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கிறேன்."

1908–ஆம் ஆண்டில் "ஸ்வேதேச கீதங்கள்" என்னும் பெயரில் முதன் முதலாக வெளிவந்த பாரதியாரின் கவிதை நூலுக்கு அவரே எழுதிப் பிரசுரித்த முகவுரை இது.

இதனைத் தொடர்ந்து, தம் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பெண்களைப் பெருமைப்படுத்தினார். அவர்களது உரிமைக்காக ஓங்கிக் குரல் கொடுத்து வந்தார்.

பெண்ணுரிமைக் கிளர்ச்சியைத் தமிழகத்தில் துவக்கி வைத்த முதல் கவிஞர் பாரதியாரே எனலாம்.

மேலும், "பெண்மையை இழிவுபடுத்தும் போக்கை நிறுத்தி, பெண்மையை போற்றினால் அது உயிரைக் காக்கும், உயிர்ப்பினை வளர்த்திடும், உயிருக்கு உயிராய் இன்பமாகிவிடும்!" என்று அறிவுறுத்திப் புதுமையை நிகழ்த்தியவர் பாரதி.

"பெண்மை என்பது தண்ணீரைப் போன்றது. ஏரி, குளம் போன்ற நீர் நிலைகளில் எவ்வளவு ஆழமாகத் தண்ணீர் தேங்கியிருந்தாலும் அது அமைதியாகவே வீற்றிருக்கும். காரணம், அதற்குப் பாதுகாப்பாகக் கரை இருப்பதேயாகும். கரை உடைந்துவிட்டால், தேக்கம் கண்டிருந்த நீர் தறிகெட்டு ஓடி, அழிவை ஏற்படுத்திவிடும். பெண்மையும் அது போன்றதே. ஆண்மை அதற்குப் பாதுகாப்பாக இருக்கும் வரை அமைதியாக இருந்து பெருமை சேர்க்கும்.

பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து ஆண்மை தவறுமானால், பெண்மை அழிவுக்கு இட்டுச் செல்லும். பாரதியார் இதனை நன்கு அறிந்திருந்தார் என்கிறார் புலவர் கீரன்.

"*பெண் அறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்*
*பேணு மாயின் பிறகொரு தாழ்வில்லை*
*கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே*
*காத லின்பத்தைக் காத்திடு வோமடா!*"

என்று பாடினார். பெண்கள் எழுச்சி கொள்ள வேண்டும் என்று விரும்பிய பாரதி, எழுச்சியுறும் பெண்மைக்கு ஆண்மை பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொல்வது உலகியல் மெய்ம்மையே.

புதுமையைப் போற்றுகின்ற பாரதியார் அதனை மிகவும் தெளிவுபடப் "புதுமைப்பெண்" பாடல்களில் நிலைநாட்டுவதைக் காண்கிறோம்.

"*ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்*
*அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்*
*பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்*
*போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்.*"

பெண்மைத் தெய்வமாம் புதுமைப் பெண் இவள் சொற்கள் நேற்றோ இன்றோ புதிதாகப் பிறந்தவையல்ல. சதுமறைப்படி மாந்தர் இருந்த நாள் முதலே இருந்திட்ட பொதுவான வழக்கமே என்று முழங்குகின்ற பாரதியின் "புதுமைப்பெண்", பெண்ணியக்கத்துக்கு சூட்டப்பட்ட மகுடம் என்றே சொல்லவேண்டும்.

"*உலக வாழ்க்கையின்நுட்பங்கள் தேரவும்*
*ஓது பற்பல நூல்வகை கற்கவும்*
*இலகு சீருடை நாற்றிசை நாடுகள்*
*யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே*
*திலக வாணுத லார்நங்கள் பாரத*
*தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்;*
*விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை*
*வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.*
*சாத்தி ரங்கள் பலபல கற்பராம்!*
*சவுரி யங்கள் பலபல செய்வராம்;*

*முத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்;*
*மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்;*
*காத்து மானிடர் செய்கை யனைத்தையும்*
*கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;*
*ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்;*
*இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ!"*

என்ற பாடல்களுடன் "புதுமைப்பெண்"ணின் பத்துப் பாடல்களும் பெண்மையின் பெருமையைப் போற்றி நிற்கும் கல்வெட்டுகளாக என்றென்றும் விளங்கும்.

கட்டுப்பாடுகள், சம்பிரதாயங்கள் நிறைந்த அன்றைய சமூகத்தில் தன் மனைவியுடன் சமமாகக் கைகோர்த்து, தெருக்களில் பாரதி நடந்து செல்வாராம். கடையம் போன்ற ஊர்களில் இவ் இணையர் நெருக்கமாக நடந்து செல்வதை மக்கள் வியப்புணர்வுடன் வேடிக்கை பார்ப்பார்களாம்.

சில தருணங்களில் மனையாளிடம் கோபப்பட்டுப் பேசிவிடுவாராம். பின்னர் அதற்காக மனைவியிடம் மன்னிப்பு வேண்டி நிற்பாராம்.

இயற்கையிலேயே ஆற்றல் வாய்ந்த பெண்கள் ஏற்றம் பெற வேண்டும் என்பதே பாரதியின் பெருவிருப்பமாகும். அதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும்? பெண்களையே அவற்றைச் சொல்ல வைத்துக் கும்மியடிக்க வைக்கிறார்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்*
*இளைப்பில்லை காண்என்று கும்மியடி"*

பலவகைகளிலும் அடிமைப்பட்டுப் பலகாலமும் அவதியுற்றுக் கொண்டிருக்கும் நமது நாட்டுப் பெண்கள் எல்லா வகையிலும் விடுதலை பெற்று, ஆண்களோடு சரிநிகர் சமானமாக இந்த நாட்டில் வாழவேண்டும் என்பதைப் பாரதியார் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் வற்புறுத்தி வந்தார். "பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் முக்கியமான ஆரம்பப் படிகள்" என்ற தலைப்பில் பாரதியார் பத்துக்

கொள்கைகளை வரையறுத்து எழுதியுள்ளார். அவை வருமாறு—

1. *பெண்கள் ருதுவாகும் முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.*

2. *அவர்களுக்கு இஷ்டமில்லா புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தக்கூடாது.*

3. *விவாகம் செய்து கொண்ட பிறகு, அவள் புருஷனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக்கூடாது.*

4. *பிதுரார்ஜிதத்தில் பெண் குழந்தைகளுக்குச் சமபாகம் கொடுக்க வேண்டும்.*

5. *புருஷன் இறந்த பின்பு ஸ்திரி மறு விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.*

6. *விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடங்கொடுக்க வேண்டும்.*

7. *பெண்கள், கணவனைத் தவிர வேறு புருஷனுடன் பேசக் கூடாதென்றும், பழகக் கூடாதென்றும், பயத்தாலும், பொறாமையாலும், ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிடவே வேண்டும்.*

8. *பெண்களுக்கு ஆண்களைப் போலவே, உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.*

9. *தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.*

10. *தமிழர்களுக்குச் சுயராஜ்யம் கிடைத்தால், அப்போது பெண்களுக்கு இராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.*

பெண்களுக்குச் சமுதாயத்தில் எத்தகைய உயர்ந்த, சிறந்த, உரிமை வாய்ந்த இடம் அளிக்க வேண்டும் என்பதில், பாரதியார்

கொண்டிருந்த துடிதுடிப்புணர்ச்சி மேற் சுட்டிக்காட்டப்பட்ட கொள்கைகளின் மூலம் தெற்றெனப் புலப்படும்.

**அறிவார்ந்த சமுதாயம் காண**
**பெருவிருப்பம் கொண்டவர் பாரதியார்**

அளவற்ற அறிவையும், ஆற்றலையும், கொண்டுள்ள தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள தமிழ் மக்கள் பாமரராய், விலங்குகளாய், பலரும் இகழ்ந்து பேசும் படி பான்மை கெட்டு வாழ்ந்து வருகிறார்களே என்பதை எண்ணியெண்ணி மனம் நொந்து பாரதி பாடுகிறார்.

*"நெஞ்சு பொறுக்கு தில்லையே – இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்*
*அஞ்சி அஞ்சிச் சாவார் – இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே"*

*என்று மனம் சலிக்கிறார்.*

ஒரு நாள் தன் மாமனார் ஊராகிய கடையத்தில் வள்ளி திருமணம் கதை சொல்லும் கலை நிகழ்ச்சிக்கு தன் நண்பர்களுடன் பாரதி சென்றிருந்தார். பாகவதர் கதையில் காளிக்கு வேடர்கள் பூசை போடுகின்ற கட்டம் ஒன்றினை விவரித்துக் கொண்டிருந்தார். வேடன் ஒருவன் ஆவேசம் வந்து பாடுகின்றானாம்.

*பாக்கு வைச்சான்*
*பழமும் வைச்சான்*
*வெற்றிலை வைச்சான்*
*புகையிலை வைச்சான்*
*ஒன்று வைக்க மறந்திட்டான்*
*ஒன்று வைக்க மறந்திட்டான்*
*அதுதான்*
*சுண்ணாம்பில்லை! சுண்ணாம்பில்லை!*

என்று பாகவதர் பாடிக்காட்டினார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பாரதியார் பலமாகச் சிரித்துக் கொண்டே எழுந்து நின்று குதித்தார். "ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? என்று நண்பர்கள் கேட்க, "எனக்கு இன்னொன்று நினைவுக்கு வந்தது அதை நினைத்துச்

சிரிக்கிறேன் என்றார் பாரதி. "அது என்ன, அப்படியொன்று" என்று ஆவல் ததும்ப அவர்கள் கேட்டார்கள். பாரதி அதனைப் பாடிக் காண்பித்தார்.

*"தமிழ் மக்களுக்கு இயற்கைக் கடவுள்*
*நிலமும் வச்சான்*
*பலமும் வச்சான்*
*நிகரில்லாச் செல்வமும் வச்சான்*
*ஒன்று வைக்க மறந்திட்டான்*
*ஒன்று வைக்க மறந்திட்டான்*
*அதுதான்*
*புத்தியில்லை ! புத்தியில்லை!"*

பாரதியின் இந்தப் பாடலைக் கேட்டு பாகவதர் உள்பட எல்லோரும் சிரித்தார்களாம்.

மனித வாழ்வில் ஆக்கவினைகள் எல்லாவற்றுக்கும் அறிவுதான் அடிப்படை என்பதைப் பாரதியார் அடிக்கடி வலியுறுத்திக் கொண்டிருந்தார். அறிவைத் தேடாமல் ஆயிரக்கணக்கான தெய்வங்களை நாடி ஓடிக்கொண்டிருக்கிறார்களே எமது மக்கள் என்று புலம்புகின்ற முறையில் பாடுகிறார்.

*"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி*
*அலையும் அறிவிலிகாள் – பல்*
*லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம்*
*எனல் கேளீரோ"*

*"மாடனைக் காடனை வேடனைப் போற்றி*
*மயங்கும் மதியிலிகாள் – எதன்*
*ஊடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்று*
*ஓதியறியீரோ"*

*"சுத்த அறிவே சிவனென்று கூறும்*
*சுருதிகள் கேளீரோ – பல*
*பித்த மதங்களி லேதடு மாறிப்*
*பெருமை அழி வீரோ ?"*

என்றெல்லாம் பாடித் தமிழர்கள் அறிவையே குறியாகக் கொண்டு வாழ்ந்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புதுமைக் கவிஞராம் பாரதியார் அறியாமைக்கு எதிராகத் தம் உரத்த குரலை எழுப்பிக் கொண்டே இருந்தார். அத்துடன், கொத்தடிமை, தீண்டாமை, இல்லாமை, கல்லாமை, பேதைமை போன்ற சமுதாயப் பள்ளங்களை நிரவி, ஒப்புரவான, தன் மதிப்பை நிறைவாகப் பெற்றிட்ட, ஒப்பிலாத சமுதாயத்தைக் காணப் பெருவிருப்பம் கொண்டிருந்தார்.

**நிறைவுரை**

ஓர் ஆணழகன் என்ற சொல்லத்தக்க ஆளுமையைப் பாரதியார் பெற்றிருந்தார் என்று, அவர் புதுச்சேரியில் வாழ்ந்த போது அவரது சீடராகவும் தோழராகவும் இருந்த வ.ரா. தெரிவிக்கிறார். கடைசல் பிடித்தது போன்ற மூக்கு, நீண்ட அழகான நாசி, செவ்வரி படர்ந்த செந்தாமரைக் கண்கள், பரந்த நெற்றி, 5 1/2 அடி உயரத்தில் 'நிமிர்ந்த நந்நடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்கு, இயல்பாக வளர்ந்து பக்குவப்பட்ட அழகும் கவர்ச்சியும் பொருந்திய மீசை, என்றெல்லாம் வ.ரா. பாரதிப் பாவலனை வருணிக்கிறார்.

உடம்பில் எப்போதும் ஒரு பனியன், பனியனுக்கு மேல் ஒரு சட்டை – அது கிழிந்தும் இருக்கலாம்; பெரும்பாலும் அதில் பொத்தான் இராது – அதற்கு மேல் ஒரு கோட்டு, அதற்கு மரியாதைக்காக ஒரு பொத்தான் போட்டுக் கொள்வார்.

சட்டையின் இடது பக்கப் பொத்தான் துவாரத்தில் ஒரு புதிய மலர் – ரோஜா அல்லது மல்லிகைக் கொத்து போன்ற மணங்கமழும் மலர். இல்லையென்றால், வாசனையற்ற ஏதேனும் ஒரு பூ; அது வேப்பம் பூவாகக் கூட இருக்கலாம். "நாள் மலர்" ஒன்று அந்தப் பொத்தான் துவாரத்தில் இருந்தேயாக வேண்டும்.

அவர் புதுச்சேரியை விட்டுச் சென்னையில் வாழத் தொடங்கிய நாட்களில் சுதேசமித்திரன் பத்திரிகையில் அலுவல்களை முடித்துக் கொண்டு நேரே பூக்கடைக்கு செல்வாராம். ஒரு செண்டு அல்லது கட்டுமல்லிகைப்பூ வாங்கி அதனை மூன்று துண்டுகளாக்கி, பெரிய துண்டைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்வாராம். மற்ற இரண்டு துண்டுகளை இரண்டு காதுகளில் அணிந்து கொள்வாராம். அங்கிருந்து நேராகக் கடற்கரைக்குச் செல்வாராம். இவ்வாறு வெ.சாமிநாத சர்மா விவரிக்கிறார். பூக்களிடத்தில் அவ்வளவு ஈர்ப்பு; மலர்மிசை ஏகிய மாக்கவிஞர் அவர்.

எப்போதும் பாரதி தன் கையில் ஒரு நோட்டுப் புத்தகம், சில காகிதங்கள், ஒரு பென்சில் வைத்துக் கொண்டிருப்பார். எழுதுவதற்குப் பேனாவை அவர் பயன்படுத்துவதில்லை. அவருடைய எழுத்துகள் குண்டு குண்டாக இருக்கும். ஓர் எழுத்தின் மீது இன்னோர் எழுத்து உராய்வதில்லை. அவருடைய கையெழுத்துக்களைப் புதிதாக எழுதப் படிக்க பயிற்சி பெறுகின்ற குழந்தைகள் கூட எளிதாகப் படிக்கலாம்.

சீக்கியர்கள் போல் முண்டாசு கட்டிக் கொள்வதில் அவருக்கு அதிக விருப்பம். அந்தத் தலைப்பாகையுடன் அவர் இந்துஸ்தானி பேசினால் அவரைத் தமிழன் என்று யாரும் நினைக்க மாட்டார்கள். அவ்வளவு தெளிவான இந்தி மொழி உச்சரிப்பைப் பாரதியிடம் கேட்கலாம்.

இளமையிலேயே நாடு முழுவதும் சுற்றித் திரிந்து பார்த்த காரணத்தாலும், பிற மொழிகள் பேசும் மக்களோடு பல்லாண்டுகள் பழக நேர்ந்த காரணத்தாலும் பாரதியின் அறிவு, விரிந்த பரப்பும் பாங்கும் கொண்டதாயிற்று. இந்தியா முழுவதையும் ஒன்றாகக் காணுகின்ற ஒருமைக் கண்ணோட்டம், பரந்துபட்ட அவருடைய அனுபவத்தின் விளைவு என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

வாழ்க்கையில் ஒரு சிறந்த குறிக்கோளைப் பெற்றவராகப் பாரதியார் திகழ்ந்தார். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று, வெந்ததைத் தின்று வேளை வந்த போது செத்து மடிகின்ற அற்ப மனிதர் கூட்டத்தில் தாம் ஒருவர் அல்லர் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

*"தேடிச் சோறு நிதந்தின்று – பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்*
*வாடித் துன்பமிக உழன்று – பிறர்*
*வாடப் பல செயல்கள் செய்து – நரை*
*கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின்மாயும் – பல*
*வேடிக்கை மனிதரைப் போலே – நான்*
*வீழ்வேன் என்று நினைத் தாயோ?"*

எனினும், பாரதியைப் பொருத்த மட்டில், வாழ்வின் குறிக்கோளாக அவர் கொண்டது எதனை என்றால், '**நமக்குத்**

***தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்***', என்பதேயாகும். இக்கடமையை நன்கு நிறைவேற்றத் தமக்கு ஆற்றல் வேண்டுமென்று இறையாற்றலை வேண்டிக்கொள்கிறார்.

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே வெள்ளமாய் அன்பு, பொறிகளின் மீது தனியரசாணை, பொழுதெல்லாம் சிவசக்தியின் பேரருள் நெறியில் நாட்டம், கரும யோகத்தில் நிலைத்திடல் என்று தன் கோரிக்கைகளை சிவசக்தியிடம் சமர்ப்பிக்கிறார்.

*"விசையுறு பந்தினைப்போல் – உள்ளம்*
*வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்".*

பாரதியின் இவை போன்ற வேண்டுதல்களைக் கருத்தில் கொண்டால், மனித வாழ்வுக்கு இன்றியமையாத் தேவைகள் என்னென்ன என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

பாரதி விரும்பும் ஓர் இந்தியன் எப்படி இருக்க வேண்டும்? அவனை வரவேற்கிறார்.

*"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா*
*உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா*
*களி படைத்த மொழியினாய் வா வா வா*
*கடுமை கொண்ட தோளினாய் வா வா வா".*

ஓர் இந்தியன் எப்படி இருக்கலாகாது என்பதையும் சுட்டிக் காண்பிக்கிறார். அவனைப் போ, போய்விடு என்று சொல்லத் தவறவில்லை.

*"வலிமையற்ற தோளினாய் போ போ போ*
*மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ*
*பொலிவிலா முகத்தினாய் போ போ போ*
*பொறியிழந்த விழியினாய் போ போ போ"*

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாடிய பாரதி, புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே என்று சொல்லித் தொழிலாளர்களுக்கு முதல் மரியாதை செய்கிறார்.

"பெரும்புகழ் நுமக் கேஇசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே"

என்றும்

"தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே".

என்றும் தொழிலாளர்களை மிகவும் உயர்நிலையில் வைத்துப் பாடியுள்ளார் பாரதியார்.

பாரதியார் காலமாகி இருபத்தியாறே ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. அவ்வளவு விரைவில் சுதந்திரம் பெற்று விடுவோம் என்று எந்தவொரு தேசியத் தலைவரும் நினைக்கவில்லை. ஆனால் பாரதியாரோ தன் வாழ்வின் போதே சுதந்திரம் பெற்றுவிடுவதாகத் தன் மனத்திரையில் காண்கிறார்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று
ஆடுவோமே"

என்று ஆனந்தக் கூத்தாடினார்.

ஆனால் இந்த மகிழ்ச்சியை அவர் முழுமையாகப் பெறக் கூடாமல் அவரது உள்ளுணர்வு தடுக்கிறது. பெற்ற சுதந்திரம் பேணிக் காக்கப்படாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிறார். நெஞ்சில் உரமின்றி, நேர்மைத் திறமற்று, வஞ்சனை செய்கின்ற மக்கள் அதிகரித்து வருவது அவருடைய மனத்தை அழுத்துகின்றது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கின்ற மக்கள் கூட்டம் மிகுந்து வருவதை எண்ணி அவரது உள்ளம் அல்லற்படுகிறது.

"தண்ணீர்விட்டோ வளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமா?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ணவிளக்கிது மடியத் திருவுளமோ?
ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?
இன்ப சுதந்திரம்நின் இன்னருளால் பெற்றதன்றோ?
அன்பற்ற மாக்கள் அதைப்பறித்தால் காவாயோ?"

என வருந்திப் பாடினார். மிக விரைவில் சுதந்திரம் பெறப் போகிறோம் என்பதையும், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் வல்லமை இந்திய மக்களுக்கு இராது, அரசியல்வாதிகள் பாழ்படுத்திவிடுவார்கள் என்பதையும் தன் வாழ்வுக் காலத்திலேயே உணர்ந்து கூறினார் இந்த முன்னுணர் அறிஞர் பாரதியார்.

**பயன் கொண்ட நூல்கள்**


1. மகாகவி பாரதியார், வ.ரா. முல்லை நிலையம், 9, பாரதிநகர் முதல் தெரு, தி.நகர், சென்னை – 600 017.

2. மகாகவி பாரதியார் நூற்றாண்டு மலர், 1982, முனைவர் நா.பாலுசாமி, அமைப்பாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் – 608 002.

3. பன்னிருவர் பார்வையில் பாரதி, தொகுப்பாசிரியர் வீ.சு. இராமலிங்கம், பாரதி இயக்கம், திருவையாறு.

4. *பாரதியார் சுப்பிரமணிய சிவா*, வெ.சாமிநாதசர்மா, மாணவர் பதிப்பகம், பீ–11, குல்மோகர் குடியிருப்பு, 15, தெற்குபோக்கு சாலை, தியாகராய நகர், சென்னை – 600 017.

5. பாரதியும், பாரதிதாசனும், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை–

600 017.

6. மகாகவி பாரதியார் மணிமொழிகள், டாக்டர் என்.ஸ்ரீதரன், கங்கை புத்தக நிலையம், சென்னை – 600 017.

7. இரு மகாகவிகள், க. கைலாசபதி, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை– 98.

8. ஓம் சக்தி, தீபாவளி மலர், நவம்பர் 2007, ஆசிரியர் நா. மகாலிங்கம், மாரியம்மாள் மகாலிங்கம் மன்றம், 69, ஆரோக்கியசாமி சாலை, ஆர்.எஸ்.புரம், கோவை – 2.

9. இருபதாம் நூற்றாண்டில் பாரதி, பிரேமா நந்தகுமார், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா அறக்கட்டளை வெளியீடு, இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

# குரவை

*இரா. சதாசிவம்*
செந்தமிழ் ஆசிரியர்
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

குரவை என்பது மாதரொடு ஆடவர்கள் சேர்ந்து, மான் தோல்சிறுபறை கல்லென் கறங்க, குறிஞ்சி மலை நிலத்தில் வாழ்குறவர் ஆடும் வரிக்கூத்து வகையாகும். இதனைப் பஞ்சமரபு உரைச் சூத்திரம் "குரவை வரியே கோலம் மூன்றும், விரவிய விநோதம் ஆகும் என்ப", எனக் கூறுகிறது. சங்க காலத்தில், குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்கள் இருபாலரும் விரவி ஆடுவது குரவை என மலைபடுகடாம் உரைக்குறிப்பில் உ.வே.சா. குறிப்பிடுகிறார். நற்றிணையில் 276–ஆம் பாடலில், காதலி தன் காதலனை ஆர்வத்தால் தான் வாழும் குறிஞ்சி மலையில் உள்ள தன் ஊருக்கு வந்து மூங்கிலாலாக்கிய கள்ளைப் பருகி வேங்கை மரத்தையுடைய முன்றிலிலே தாம் அயரும் குரவையுங்கண்டு மகிழ்ந்து செல்லுமாறு அழைக்கின்றாள். காதலியின் உறவினர் உலகியல் அறிவராகலின் காதலனை எதிர்கொண்டு ஓம்பிப் போற்றுவர் என்பது குறிப்பிப்பான் நறவுண்டு குரவையுங் காண்பாய் என்றாள், என உரை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். குறிப்பாகக் குரவைக்கூத்து மாதரொடு ஆடவர் குழுமியாடும் இசைக்கூத்து; கல்லென்கறங்கிசை முழுங்கக் காதலர்களுடைய காதல் உணர்வை மேலோங்கச் செய்து மணம்புரிவித்து சமூக வாழ்க்கையில் களிப்பும் உவகையும் சிறக்கச் செய்வது நாகரிகம் மிக்க கூட்டு வாழ்க்கையைச் சமுதாயம் உறுதி செய்த காலத்து இத்தகைய இசைக்கூத்துக்கள் சமுதாயத்தில் இடம் பெற்றன. அவற்றை இலக்கியம் பாடுபொருளாகக் கொண்டது.

திருமுருகாற்றுப்படை என்னும் சங்க இலக்கியம் குன்றக்குறவர், தம்மூர்ச் சிறுகுடிக்கிளையுடன் மகிழ்ந்து, இசைக்கருவிகளாகிய தொண்டகமும் சிறுபறையும் இசைக்க

அதன் தாளத்திற்கு ஏற்பக் குரவைக் கூத்தினை மயிலை ஒத்த இளமகளிருடன் குறவர்கள் முழவையொத்த கையினாலே பெருமிதத்துடன் குறமகளிர் கையினைத் தழுவி எடுத்துக் கொண்டு முதற்கைகொடுத்து மலைகள் தோறும் இசைக்கூத்தாகிய குரவை ஆடினார்; அஃது அவர் இயல்பு. திருமுருகாற்றுப்படை என்னும் இலக்கியம், சங்க காலத்தமிழர் மரபாக, மாதரும் ஆடவரும் இசையுடன் கூடிய ஆடல் பாடல்கள் நிறைந்த களியாட்ட நாகரிகம் உடையவர்கள் என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது.

தேவார ஆசிரியர் திருஞானசம்பந்தர், மலைவாழ் மக்களாகிய குறவர்கள் கோதை வரி வண்டிசைகொள் வளர்கீதம் முரல மாதரொடும் ஆடவர்கள் வழிபாடு செய்யும் மலை எனக் குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரம் குரவைக் கூத்தை விரிவாகக் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவைஎனத் தனித்தனி தலைப்பிட்டு இலக்கியமாகப் போற்றுகிறது.

சங்ககாலத்தில் விருந்தினர் சிறக்கவும் திருவிழாச் சிறக்கவும் குரவை இசைக்கூத்தாடினர். சிலப்பதிகாரத்தில், புராணம் வரலாறு ஆகியவை இசை, நாடக வடிவம் பெற்று குறவர்களும் ஆயர்களும் குரவை நாடகக் கூத்தாடினர், என்பது, 'மண்ணின் மாதர்க்கு அணியாகிய கண்ணகி தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவையாடுதும்யாம் என்றாள், கறவை கன்று துயர்நீங்குக எனவே, என்பதால் அறியமுடிகிறது. சிலப்பதிகாரம், குரவை இலக்கியம் வளர்ச்சி பெற்ற காலமாகும்.

முல்லை நிலமக்கள் ஆயர்சேரியில் எருமன்றத்தில் குரவை ஆடினர். குறிஞ்சி நிலத்தில் குறவர்கள் மலையில் வேங்கை முன்றிலில் குரவையாடினர்.

ஆயர்பாடியில் கண்ணனும் அவனுடைய அண்ணன் பலராமனும் நப்பின்னைப்பிராட்டியுடன் ஆடிய குரவைக் கூத்தினைச் சிலப்பதிகாரம் போற்றுகிறது. மாதரி என்பவள்,

கன்னியர் எழுவரை நிறுத்தி ஏழிசையின் பெயர்களாகிய குரல் முதலியவற்றை அவர்களுக்குப் பெயர்களாகச் சூட்டினாள். அவர்களுள் குரலாகியவளைக் கண்ணன் என்றும் இளியாகியவளைப் பலராமன் என்றும், ஏனைய நரம்புகளாகியோரை மற்றை நால்வர் என்றும் பெயரிட்டாள். அவர்கள் நண்டு வடிவில் கைகோத்து நின்று மாயோனைப் பாடிப் பரவைக் கூத்து ஆடினார்கள்.

குரவையுள் எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கிய கடவுள் தன் அடியவர்க்காக எளியனாக ஆயர்களிடம் கயிறு கொண்டு கட்டப்பட்டும், பஞ்சவர்களுக்காக நூற்றுவரிடம் நடந்து தூது சென்றும், மூன்று உலகங்களையும் தாவிய சேவடி இராமனாகி இலக்குவனுடன் காட்டில் நடந்ததுமாகிய அன்பிற்கு அடிமையாகும் குணமாண்பு கற்பவர் நெஞ்சில் பக்திச் சுவை அனுபவத்தை அளிக்கிறது. ஆய்ச்சியர் குரவை திருமாலை முன்னிலைப்படுத்தியும் படர்க்கைப் படுத்தியும் போற்றிப் பரவுவது கற்பவர்களுக்கு நெஞ்சைத் திருவருள் அனுபவம் கொள்ளச் செய்கிறது.

குன்றக் குரவை குறிஞ்சிக் கடவுளாகிய முருகவேளைப் பரவுகின்றது; அவன் கைவேலின் பெருமிதம் பேசுகிறது. தலைவியின் களவுக்காதல் அறியாத பெற்றோர் வேலனை வேண்டிக் குறிகேட்டல் என்பது ஒரு பகுதி; அதன்கண் உண்மை அறியாத பெற்றோர்க்கு உண்மை உணர்த்தி அறத்தொடு நிற்றல் களவுக்கற்பை வலியுறுத்துவதாகும். களவு அறியாத வேலன் அறியாது கூறின் அவன் ஆலமர் செல்வன் புதல்வன் ஆயினும், கார்க்கடப்பம்தார்க் கடவுள் முருகனாயினும் மன்ற மடவன் என்னும் பகுதி பழந்தமிழர் காதல் வாழ்வோடு இறைநிலைத் தொடர்பு பேசுகிறது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் குரவை ஒரு இசைக்கூத்து; திருமணம், திருவிழா நிகழ்ச்சிகளை கலைவடிவம் பெறச் செய்திருக்கிறது. மாதரும் ஆடவரும் கூடிக்கைகோத்து இசையுடன் ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர். நாகரிகமும் உலகியலும்

தெரிந்த தமிழ் மக்கள் காதலர்கள் விருப்பத்தை இத்தகைய நிகழ்வுகளில் அறிந்து நிறைவு செய்துள்ளனர்.

சிலப்பதிகாரக் காலத்தில் குரவை இசை நாடகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. காட்டாக,

ஆய்ச்சியர் குரவையில் இளங்கோவடிகள் கன்றைக் கோலாகக் கனியை உதிர்த்த மாயவன், இன்று நம் பசுக்கூட்டத்துள் வருவானேல், அவனது குழலோசையைக் கேட்டு மகிழலாமே என்று ஆயர்குடிப் பெண்கள் உணர்ச்சி பொங்கப் பாடி மகிழ்கிறார்கள். மேலும் மந்தரகிரியை மத்தாகவும் ஆதிசேடனைக் கயிறாகவும் கொண்டு பாற்கடல் கடைந்த மாயவன் தொடர்ந்து குழல்ஊதும் செவ்வியைக் கேட்போமே என்று அகமும் முகமும் மலரப் பேசுகின்றனர். இனி, குன்றக் குரவையில் திருச்சீர்அலைவாய் என்ற திருச்செந்தூரிலும், திருச்செங்கோடு முதலிய இடங்களிலும் கோயில் கொண்டு அடியவர்கட்கு அருள் அமுது அளிக்கும் முருகவேலின் வேலாயுதம் அல்லவா கடலில் மாமரமாக நின்ற சூரனை ஊடுருவிச் சிதைத்தது. என்னே நம்முருகவேலின் வேல் என்று ஆடிப்பாடி மகிழ்கிறார்கள் குன்றில் வாழும் குறவர்கள்.

இவ்வாறாகக் குரவைக்கூத்தின் பல்வேறு நயங்களையும் சிலப்பதிகாரம் இசைகலந்து எடுத்துக்காட்டியிருப்பது கற்போரைக் களிப்படையச் செய்கிறது.

நாடகத்தின் ஒரு கூறாகிய குரவைக் கூத்துகள் நாட்டுப்புறமக்களிடம் இன்றும் குலவை என்ற முறையில் நீடித்து வருவது இன்பம் தரும் செய்தியாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# நூலாராய்ச்சி

(கம்பராமாயணம்)

வள்ளல், பொ. பாண்டித்துரைத் தேவர்

உலகில் வழங்கும் பாஷைகள் பல. அவ்வப்பாஷைக்குரியரா கப்பல சான்றோர் பற்பல காலங்களில் தோன்றிக் கடவுளின் றிருவருட்பேறுடையராய்த் தந்நுண்ணறிவின் பயனாய நூல்களியற்றி அதனால் அப்பாஷைக்கும் தமக்கும் மிக்க சிறப்புண்டாக்கியுள்ளாரென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். அவரர்லியற்றப்பட்ட நூல்கள் பல்வகை நயங்களும் பொருந்தி நீண்டகாலமாய்ப் பல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன. அந்நூல்களே நவில்தொறும் நூனயம்போலும் என்னும் வாக்கிற்கிலக்கியமாய்ப் பலமுறையாராயப்புகினும் ஒவ்வொரு முறையினும் புதிய புதிய விஷயங்களை அறிதற்கிடனாயுள்ளன. இவ்வாறாய சிறந்த மொழிகளுள் நம் தமிழ் மொழியும் ஒன்றே. இம்மொழிக்குரியருள் எண்ணில் பல சான்றோர்கள் அவ்வப்போதவதரித்துச் சிறிய பெரிய நூல்கள் பல இயற்றி நம் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளார். அந்நூல்களுட் சிலவற்றையேனும் பலகால் நுணுகியறியப்புகுங் கருமத்தை மேற்கோடற்கு நம் ஆயுட்பிரமாணம் பற்றாததாகும். ஆயினும் அச்சான்றோர்களது நூற்பொருள் ஆராய்ச்சியில் மனத்திற்குண்டாம் இன்பம்போல் இவ்வுலகில் வேறெக்கருமத்தினும் உண்டாவதில்லையென்பது கற்றோர்களது அநுபவசித்தமே. இவ்வகையாய நூலாராய்ச்சியையும் ஓர் விஷயமாகத் தம்முட்கொண்டு நம் செந்தமிழ் விளங்கவேண்டுமெனவும் அவ்விஷயதானஞ் செய்பவருள் யானும் ஒருவனாயிருத்தல் வேண்டுமெனவும் சில வித்துவான்களும் எனது நண்பருட் சிலரும் விரும்பியதனால் மிக்க கல்விமான்களால் இயற்றற்குரிய இவ்வரும்பெருஞ் செயற்குச் சிற்றறிவினனாய யான் அவராணையை மறுத்தற்கஞ்சி ஒருப்பட்டேன்.

சான்றோர் நூல்களுள் செம்பொருளேயன்றிச் குறிப்பிற்றரு பொருள் மிகுதியும் உள்ளன. அவை நுணுகியறிவார்க்கே புலப்படற்குரியன. இத்துணைச் சிறப்புவாய்ந்த நூல் பல நம் தமிழ் மொழியிடத்து உளவேனும் யான் இதுபோது கம்பராமாயணம் என்னும்

நூலாராய்ச்சியை விஷயமாகக் கொண்டு என் சிற்றறிவிற் கெட்டிய துணையும் நம் செந்தமிழ் வாயிலாய் விரிப்பான்றொடங்குகின்றேன்.

சுந்தரகாண்டம : திருவடிதொழுதபடலம்.

(58—வது செய்யுள்)

*"கண்டனன் கற்பினுக்கணியைக் கண்களால்*
*தெண்டிரையலை கடலிலங்கைத் தென்னகர்*
*அண்டர்நாயக வினித்துறத்தியையமும்*
*பண்டுளதுயருமென்ற னுமன்பன் னுவான்."*

இச்செய்யுள் அநுமன் சீதையைக் கண்டு பின்னர் ஸ்ரீ ராமரிடம் வந்து அவர் திருவடிதொழுது பிராட்டியின் விருத்தாந்தம் கூறுவது.

இதில் கண்டனன் எனப்பயனிலையை முன்னர்க் கூறியது என்னையோவெனின்? ஸ்ரீராமன் சீதையைத் தேடிக் கண்டுவருதற்கு அநுமனுக்கு ஆணை தந்தவராதலின் அநுமன் காண்டற்குரிய பொருள் சீதையென்பது ஸ்ரீ ராமனுக்குத் துணிந்த பொருளேயாம். அநுமன் கண்டனனோ வில்லையோ என்பதே ஐயம். ஐயத்தை நீக்கலே வாக்கியம் எழுவதன் முக்கியப் பயனாதலின், கண்டனன் என்னும் ஐயத்தை நீக்குஞ் சொல்லை இங்ஙனம் முன்னர்ப் புணர்த்திக் கூறினார் எனக்கோடல் ஒன்று. அன்றியும், சீதையைக் கண்டனன் எனக் கூறின் சீதையென்ற சொல்லைக் கேட்ட துணையானே பயனிலை கண்டதாகவோ காணாததாகவோ எவ்வாறு முடியுமோ என்று ஐயத்தை விளைத்துப் பயனிலை முடியுந்துணையும் ஸ்ரீ ராமனை அவாவியவுள்ளத் தனாக்குமாதலின் அத்துணைச் சிறுபோதும் அந்நிகழ்ச்சியுறா வண்ணம் துணி பொருளைக் கூறிக் காலத்தை நீட்டியாது ஐயத்தை விரைவினீக்கற் பொருட்டு கண்டனன் என்ற சொல்லை முதற்கட்பொருத்திக் கூறினாரெனக் கோடலும் ஒன்று.

இனிச் சீதைக்குரிய இயற்பெயராற்கூறாது கற்பினுக்கணி என ஒரு புனைபெயராற்கூறியது என்னெனில்? கற்பென்ற துணையானே பெண்ணென்பதும் அவள் தன்மையும் ஒருங்கே அறியக்கிடத்தலானும் கற்பென்ற சொல்லால் குறிக்கப்படும் பெண்பால் சீதை என்பது முன்னரே ஸ்ரீ ராமனுக்குத் துணியப்பட்ட பொருளாதலானும் சொற்பல்காமை என்னும் நயம் பற்றிக் கூறியதெனலாம். கற்பினைச் சீதை அணியாகக் கொண்டனள் எனக் கூறல் மரபாயிருக்க, கற்புச் சீதையை அணியாகக் கொண்டதெனப் பொருள்பட, கற்பினுக்கணியை என்று கூறியது என்னையோவெனில்? சீதை கற்புக் குணம் உடையாள் என்பது ஸ்ரீராமன்

நன்கறிந்ததே ஆயினும் அவளைக் கொண்டு சென்றான் அரக்கனாதலின் அவன் ஆக்கிரமித்துக் கற்புக்கழிவு செய்தனனோ என ஐயுறற்குக் காரணமுண்டாதலின், கற்புச் சீதையாற் போற்றப்பட்டும் பிறர் ஆக்கிரமத்தால் அழிவு பெறாமலும் வனப்புற்றிருக்கின்றதெனக் குறித்தற் பொருட்டே கற்பு சீதையை அணியாகப் பூண்டு விளங்கியதெனச் சீதையின் கற்பில் எவ்வகை ஐயமும் ஒரு சிறிதும் நிகழாவண்ணம் கூறியதெனக் கொள்க. அன்றியும் கற்பென்பது பொதுவகையால் மகளிர் யாவரும் இன்றியமையாது போற்றற்குரிய குணமாம். அன்பென்னுங் குணத்தைத் தம் பதிமாட்டேயன்றி வேறெப்பொருளினும் செல்லற் கிடங்கொடாது போற்றுதலேகற்பெனத்தகும். கற்புக்குணம் பூண்ட மங்கையர் பல்லோரும் தம் பதிமாட்டே செல்லற்குரிய அன்பைப்பிரித்துத் தம் பதிமாட்டும், பரமபதியான ஈசன் மாட்டும் செலுத்துதலும், அவ்வாறு இருவகைப்பட அன்பு செலுத்தினும் அவரைக்கற்புடைமங்கையராகவே உலகங்கொள்ளலும் இயற்கை. ஆயினும் ஒரு திறப்பட்ட அன்பு இருவகைப்பட்ட துணையானே அக்கற்பின் சிறப்புச் சிறிது குன்றியதாகவே கொள்ளலாம். சீதையின் விஷயத்தில் பதியும், பரமபதியும் ஒருவரான ஸ்ரீ ராமபிரானேயாதலால் சீதையின் கற்பில் ஒரு சிறு குறையும் இன்றாகி விளங்குதலின், கற்புக்குச் சீதை அணியாகிக் கற்பின் இயற்கையில் அமைந்த சிறிய குறையையும் மாற்றிக் கற்பை வனப்புறச் செய்தாள் எனக் கோடற்கே கற்பினுக்கணியை எனக் கூறியதெனக்கொள்க.

இனி, கண்டனன் என்ற துணையானே காண்டற்குரியவுறுப்புக் கண் என்பது தெளிவாயிருக்க கண்களால் என மிகுத்துக் கூறியது எதுபற்றியோ எனின்? ஒரு பொருளை நிச்சயித்தற்குப் பிரத்தியட்சம், அநுமானம், நூல் எனப் பிரமாணங்கள் மூன்றுள்ளன. இவற்றுள் அநுமான நூல்பிரமாணங்களால் தெளிந்த பொருளையும் பிரத்தியட்சம் போற்கொண்டு வியவகரிப்பது உலகவழக்கில் உண்டு. அதுபோல் சம்பாதி உயர்ந்து பறந்து சீதையை இலங்கையிற்கண்டு சொல்லிய ஆப்தவாக்கியப் பிரமாணத்தோடு அமையாது தானே கடலைத் தாவிச் சென்று சீதையைத் தன் கண்கொண்டு கண்ட பிரத்தியட்சம் பற்றிக் கூறியதென வலியுறுத்தற்கே கண்களால் என அநுமன் சொல்லியதெனக் கோடற்கென்க. அற்றாயின், கண்டனன் என்ற சொல்லை அடுத்தே கண்களால் என்ற கருவிப் பொருளையும் உடன்கூறாது கற்பினுக்கணியை என்ற சொற்குப் பின்னர் கண்களால் எனக் கூறியது என்னையோவெனின்? கற்பென்பது உள்ளத்தினிகழும் ஓர் நெகிழ்ச்சியாய குணமேயன்றிக் காண்டற்குரியபொருள் அன்றாயினும்

அசோகவனத்திடை இராவணன் வந்து பிராட்டியாரோடு சம்பாஷித்தகாலத்து வெளிப்பட்ட சீதையின் கற்புத் திறத்தை அநுமன் மரத்தில் மறைந்து நின்று கண்கூடாகக் கண்டானாதலின் சீதையையேயன்றி அவள் கற்புத்திறனையும் தன் கண்ணாற்கண்ட பிரத்தியட்சம் பற்றிக் கூறியதெனக் கோடற்கு, கற்பினுக்கணியென்ற
பிரத்தியட்சம் பற்றிக் கூறியதெனக் கோடற்கு, கற்பினுக்கணியென்ற
சொற்குப்பின்னர் கண்களால் எனக் கருவிப்பொருளை வைத்ததென்க.

இனி, "தெண்டிரையலைகடல் இலங்கைத்தென்னகர்" என்றதனால் அநுமன் சீதையைக் கண்டு இடங்கூறியவாறாயிற்று. இலங்கையென்ற இடப்பெயரோடு அந்நகர்நின்ற திசையையும் உணர்த்துவான் தென்னகர் எனக் கூறியதாகக் கொள்ளலுமாம். அன்றியும் சீதையைக் காண்டலே காரணமாக அநுமன் இலங்கை சென்றிருப்பினும் மாற்றான்வயிற் சென்றுழி அவன் வலிமுதலியன ஆய்ந்தறிந்து தம் நாயகற்குணர்த்தல் உத்தமத்தூதின் கடனாதலால் அம்முறை பற்றி அநுமன் இலங்கையின் தன்மையை நன்காராய்ந்து ஸ்ரீ ராமனுக்குக் கூறியதாகப் பொருள் கோடற்கும் இடந்தந்துள்ளது. அஃதெங்ஙனம் எனின்? தென்னகர் என்பது அழகுபொருந்திய நகர் எனப் பொருள்படும். இதனால் இராவணன் முன்னர்ச் செய்த தவம் முதலிய நற்கருமத்தின் பயனாய் இத்திருவெய்தினனென்பது தெளிவாம். ஆயினும் அலை கடலிலங்கையென இலங்கைக்குக் கொடுத்த அடையால் கடல்சூழ்ந்த இலங்கை எனப் பொருள்பட்டு கடல் கரியநிறத்தைக் குறிக்க கரியநிறம் பாவத்தைக் குறிக்க பாவத்தாற் சூழப்பட்ட இலங்கையெனக் குறிப்பிற் றருபொருளாய்க் கொள்ளற்கு இடந்தந்துள்ளது. இதனால் முன்னர் இலங்கைக்கு அரசனான இராவணன் புண்ணியப் பேறுற்றிருந்தும் பின்னர் அவன் செய்த பாவம் மிகுத்துச் சூழ்ந்துவிட்டமையால் விரைவில் அவன் அழிதற்குரியனென அநுமன் உய்த்துணர்ந்து ஸ்ரீராமனுக்கு அக்கருத்துந் தோன்றக் கூறினான் எனவும் கொள்ளலாம். அன்றியும் கடல் தாழிடமாதலின் அதனை அடுத்த இலங்கையும் தாழ்வடைந்திருக்கின்றதெனக் குறித்ததாகவுங் கொள்ளலாம். இதுவன்றியும் வானரவீரர்க்குச் சீதையைத் தேடிவரும்படி குறித்தகாலத்து அநுமன் வாராது காலந்தாழ்த்தமைபற்றி ஸ்ரீ ராமன் தன்னை அபராதியாய் மதித்தல் கூடுமாதலின் அவ்வாறெண்ணாதிருக்கக் கடலைக் கடந்து சீதையைக் காணவேண்டியிருந்த தாமேற்கொண்ட செயலின் அருமை தோன்றத் தெண்டிரை அலைகடலிலங்கை எனக் கூறித்தன் அபராதத்தை க்ஷமித்தற்குக் காரணமுளதெனக் கூறினான் என்றலும் ஆம்.

இனி, "அண்டர்நாயக" என, இராமனை ஓர் புனைபெயர் கொண்டு அநுமன் விளித்தவாறென் எனின், கடல்சூழ்ந்த இலங்கை என்றதனால் சத்துரு பக்கல் தாழ்வு குறித்தானாகலின் அதனின் மாறாய்த் தன் நாயகன்மாட்டுள்ள உயர்வுகுறிப்பான் அண்டர்நாயக எனக் கூறினானாகும். அன்றியும் அண்டர் யாவரும் இராவணன் மாட்டு ஏவற்றொழில் புரியக் கண்ட அநுமன் இராவணனின் சிறப்புடைமை இராமனிடைக் கண்டானாதலின் அண்டர்நாயகன் என்ற பெயர்புனைந்தான் எனக் கொள்க. அன்றியும் கடல்சூழ்ந்த இலங்கை என்றதனால் பாவஞ்சூழ்ந்த இலங்கை எனக்கொண்டு அதற்கு இறைவனும் சத்துருவுமான இராவணன் பாவியெனத் துணிந்தான்; அதற்கு மாறாய்ப் புண்ணியபூமியில் உறைபவர் அண்டர் ஆதலின் அவர்க்கு நாயகன் என்றதனால் ஸ்ரீ ராமனைப் புண்ணிய மூர்த்தியெனக் கொண்டு விளித்தானென்க. இதனால் பாவந்தோற்பதும் புண்ணியம் வெல்லுவதும் ஒருதலையாகலின் பாவியாகிய இராவணனுக்குத் தோல்வியும், ஸ்ரீராமனுக்கு வெற்றியும் உளவாதல் குறித்துக் கூறினான் எனக் கோடலும் அமையும். அன்றியும் இராவணன் அண்டர்கட்கு இடுக்கண் செய்வதால், தம் அடியார்க்குறும் இடையூறு நீக்கல் ஆண்டான் கடமையாதலின், ஸ்ரீராமன் இராவண ஸம்ஹாரம் செய்வதற்குக் காரணமுண்டெனத் தோற்றுவான் அண்டர் நாயக என விளித்தான் என்பதுமாம்.

இதனையடுத்து "இனி"யென்னும் பதப்பிரயோசனம் யாதோ என்னின்? தான் இதுகாறும் உணர்ந்து கூறிய யாவும் மெய்யுணர்ச்சி யேயன்றி ஒரு சிறிதும் பொய்யுணர்வில்லை எனத் தன் துணிபின் வன்மை தோற்றற்கென்க.

இனித் துறத்தி என்றார்: துறத்தல், நீக்கல், ஒழித்தல், தவிர்த்தல் முதலிய சொற்கள் பிற்காலத்தில் பொருள் வேற்றுமை சிறிதுமற்ற ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல்லாகக் கொள்ளும் வழக்கு உளவேயன்றி முற்காலத்துச் சான்றோராய நூலாசிரியர் உரையாசிரியர் முதலியோர் இச்சொற்களைச் சிறிது பொருள் வேற்றுமையுடையனவாகவே கொண்டு அவ்வவ்விடத்திற்கேற்ப அவற்றைப் பிரயோகிக்கும் கொள்கையுடையாரென்பது பண்டைநூல் உரையாராய்ச்சியுடையாரது துணிபு. இவ்வாறு பல சொற்களையும் அவ்வவற்றிற்குரிய பொருளாற்றலை நன்குணராது பிரயோகிக்கும் வழக்கை எடுத்து விளக்கப்புகின் மிகவிரியுமாதலால் இங்குப் பிரயோகிக்கப்பெற்ற துறத்தல் என்னும் சொற்பொருளாற்றல் ஒன்றே ஆராய்வாம். ஒரு காலத்துத் தான்

நீக்கியபொருள் தன்வயின் பிற்காலத்து வந்து அமையவுங்கூடும். அவ்வாறன்றி ஒரு காலத்துத் தாம் நீக்கியது பின்னர் எக்காலத்தும் தம்மை அடையாது விடுதலென்ற பொருள் பற்றியே துறத்தல் என்னும் பதம் பிரயோகிக்கப்படுவது. இதனை ஒருகாலத்து இல்லறவின்பத்துப் பொருந்திநின்று பின்னரவ்வின்பம் ஒரு சிறிதும் தம்மை வந்து அடையாது அறவே ஒழித்தவரைத் துறந்தார் எனக் கூறும் வழக்குப் பற்றியுணர்க. இதனால் இங்குத் துறத்தி ஐயமும் பண்டுள துயரும் என்ற இடத்தும் ஐயமுந் துயரும் இனி எக்காலத்தும் ஒரு சிறிதும் ஸ்ரீ ராமனை வந்தடையாதென்னுந் துணிபுபற்றி அப்பொருட்குரிய துறத்தி என்னுஞ்சொல்லாற் கூறியதென்க.

இனி, ஐயமும் என்று பல்வகை ஐயங்களையும் உளப்படுத்தற்கு ஜாதி ஒருமையாற் கூறினார். பல்வகை ஐயமாவன:– சீதையிருக்குமிடம், அவள் கற்பின் நிலை, மாற்றான்வலி, தன்வலி, போரில் வெற்றி முதலியன. இவையாவும் தாம் நன்காராய்ந்த துணிபுரை முன்னர்க் கூறினராதலால் அதுபற்றிய ஐயம் ஸ்ரீராமனுக்கு இனி நிகழன் முறையன்றென்பான் இனித்துறத்தி ஐயமும் என்றார்.

இனி, பண்டுளதுயரும் என்றது எற்றுக்கெனின், ஐயம் பல்வகையாயவாறுபோல் துயரும் பல்வகைக் காரணம் பற்றி எழுந்தனவாகும். துயரெனக் கூறியமையாது பண்டுளதுயர் என்றதனால் சீதையின் பிரிவால் உண்டாய துயர் நீக்குங்காலம் கிட்டியதனால் துயரைப் பண்டுளதெனக் கொண்டாரென்க. அன்றியும் ஸ்ரீ ராமனுக்குச் சீதையின் பிரிவு நீண்டகாலம் உண்டாயதெனக் காலத்தின் நீடிய தன்மை குறிப்பான் பண்டெனக் கூறியதுமாம். அல்லதூஉம் ஸ்ரீராமன் நாடுவிட்டுக் காடடைந்ததனால் தாயர் தம்பியர் முதலியோரை விட்டு நீங்கிய துன்பமும் இராவணவதம் விரைவில் முடிந்து நாடடையத் தீருமாதலின் அத்துயரும் நீக்கற்குரிய என்றற்குப் பண்டுளதுயரும் துறத்தியென்றதென்க. மற்றும் பாற்கடலில் தேவர்கட்கும் தண்டகவனத்தின் முனிவர்களுக்கும் கண்டகனான இராவணனை வதைத்து அவர்கட்கு இன்பம் நல்குவதாக வாக்களித்தபடி அது நிறைவேறாது தாங்கூறிய துஷ்டநிக்ரகஞ்செய்து சிஷ்டபரிபாலனம் செய்யக் காலந்தாழ்த்தமையான் ஸ்ரீராமனுக்குண்டாய துயரும் குறித்தற்குப் பண்டுளதுயரும் எனக் கூறியதெனலும் பொருந்தும்.

இனி, "அநுமன் பன்னுவான்" என முடித்தமையின் இச்செய்யுள் அநுமனது கூற்றெனவுணர்க. இதில் பயனிலையை இறந்த காலத்தாற் கூறன் மரபாயிருக்கப்பன்னுவான் என எதிர்காலத்தாற் கூறியது என்னையோ எனில், தாம் கருதிய விஷயங்களைத் தொகுத்து இச்செய்யுளிற் கூறியதேயன்றிப் பின்னரும் சில செய்யுட்களால் வகுத்துரைப்பான் புகுகின்றாராதலின் என்க.

# இருட்டறையில் - ஏதில் பிணம்

"கலைமாமணி" முனைவர். பேராசிரியர்
**கு. ஞானசம்பந்தன்**
தியாகராசர் கல்லூரி, மதுரை–9.

**முன்னுரை**

தமிழருக்குரிய அடையாளங்களில், தமிழரின் மறைநூலாகக் கருதப்படுகின்ற திருக்குறளும் ஒன்று. இந்நூலுக்குரிய காலம் இரண்டாம் நூற்றாண்டாகக் கருதப்பட்டாலும், இந்நூலாசிரியரின் பெயரோ அவர் குறித்த வரலாற்றுச் செய்திகளோ இதுவரை தமிழ் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படவில்லை, என்பது குறிப்பிடத்தக்கது. தவிரவும், இந்நூலுக்குத் திருக்குறள் என்று நூலாசிரியராகிய திருவள்ளுவர் பெயரிட்டாரா? அதிகாரங்களைப் பிரித்துத் தலைப்புக் கொடுத்தாரா? என்ற ஐயங்களும் உண்டு.

நமக்குக் கிடைத்துள்ள 133 அதிகாரங்கள் முழுமையானவையா? அல்லது இதற்கு மேலும் எழுதப்பட்டு அவை கிடைக்கவில்லையா? இந்த ஐயங்களுக்கு இடையில், பொருட்பாலில் வரைவில் மகளிர் என்னும் 92–ஆம் அதிகாரத்தில் (குறள் எண். 913–இல்)

> *"பொருட்–பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி*
> *லேதில் பிணந்தழீ இ யற்று"*

என்னும் குறட்பாவில் காணப்படும் உவமை குறித்து ஓர் ஐயம் தோன்றுகிறது.

இக்குறளுக்குப் பரிமேலழகர், அ. மாதவையர், சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார், திருக்குறள் 'தமிழ் மரபுரை' எழுதிய தேவநேயப்பாவாணர் ஆகியோர் எழுதியுள்ள **"இருட்டறையில் ஏதில் *பிணம்*"** என்னும் பொருள் குறித்த முரண்பாடுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பரிமேலழகரின் கருத்து**

மேற்குறித்த குறளுக்குப் பொருள் கூற வந்த பரிமேலழகர்.

"கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையுடைய முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்" எனக் கூறி மேலும் .....

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தும், செயலும் ஆராயாது, சாதியும், பருவமும் ஒவ்வாதாளை முயங்குங்கால் அவர் குறிப்புக்கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாத ஓர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்போடு ஒக்குமெனவே அகத்தால் ஒருவா நின்றும் பொருள் நோக்கிப் புறத்தே தழுவுவார். அதனை ஒழிக என்பதாகும் என விசேடவுரை கூறியுள்ளார்.

சுருக்கமாகச் சொல்லுவதானால் பொருட்பெண்டிர் என்று அழைக்கப்படுகின்ற, பொது மகளிர், தன்னிடத்தில் பொருள் கொண்டு வருகின்ற ஆடவனை விரும்பாமல், அவன் கொண்டு வருகின்ற பொருளையே விரும்புவது என்பது, எதைப்போல் என்றால், இருட்டறையில் உள்ள முகமறியாத பிணத்தை தழுவுவதற்கு ஒப்பானதாகும். இதில் இருட்டறை, ஏதில் பிணம் என்னும் சொற்களுக்கு எந்த உரையாசிரியரும் சொல்லாத புதுக்கருத்து ஒன்றினை 19–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாலக்காட்டு ஆ. மாதவைய்யர் தம்முரையில் குறிப்பிடுகிறார்.

**ஆ. மாதவைய்யரின் கருத்து**

மதுரை தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழ் இதழில் 4–ஆம் தொகுதியில் பொருட் பெண்டிர் என்னும் திருக்குறள் என்ற கட்டுரையில் பரிமேலழகர் எழுதிய உரையில் சில ஐயங்களை எழுப்பிப் பின்னர் புதிய விளக்கமும் தருகிறார் மாதவையார்.

அச்சந்தேகங்கள் வருமாறு,

1. கூலிக்குப் பிணம் எடுப்பவர்கள் பிணத்தைக் கண்டு அருவருப்பு கொள்வார்களா? பணம் கிடைப்பதால் மகிழ்ந்து தானே எடுப்பார்கள்.

2. பிணத்தை இருட்டறையில் வைப்பது மரபு தானா? சிறு கைவிளக்காவது இருக்குமே!

3. பிணம் எடுப்பதைத் தழுவுதல் என்ற வார்த்தையில் குறித்து இருப்பார்களா? எனக் கேட்டு, மலையாள தேசத்தில் தாம் கேட்டறிந்த செய்தி ஒன்றைத் தம் புதிய கருத்துரைக்கு ஆதாரமாகக் குறிப்பிடுகிறார்.

அது என்னவெனில், மலையாளத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பிராமணர்களிடையே பழக்கம் ஒன்றுண்டு. ஒரு குடும்பத்தின் மூத்த பையனுக்கு மட்டுமே முறைப்படி திருமணம் நடைபெறும். மற்ற சகோதரர்கள் மணமின்றி கீழ்சாதிப் பெண்களோடு தொடர்பு கொள்வர். இதனால் அதிகமான அளவு பிராமணப் பெண்கள் திருமணமின்றிக் கன்னிகளாக இறப்பார்கள்.

அவ்வாறு கன்னிகளாக இறக்கும் பெண்கள் சொர்க்கத்தை அடையமாட்டார்கள் என்று நினைத்து அதிகப்பணம் கொடுத்து வேறு பிராமணர்களை வரவழைத்துப் பிணவிவாகம் நடத்தி, கன்னி கழிவு செய்விப்பார்களாம். இந்த வழக்கத்தைத் தான் திருவள்ளுவர் தம் குறளில் கூறியிருக்க வேண்டும் எனச் சொல்லி,

பொது மகளிரை விரும்பிச் செல்லும் ஆடவனான நீ, அவள் உன்னை மனதார விரும்புவதாக நினைத்துச் செல்லுகிறாய். ஆனால் அவளோ அதைப் பிணத்தை எடுப்பவர் நிலையில் உன்னைத் தழுவுகிறாள். எனவே நீ பிணத்துக்கு ஒப்பாவாய். ஆகவே இத்தொடர்பை விட்டுவிடு என வள்ளுவர் குறிப்பிட்டு இருக்க வேண்டும் எனத் தன் கட்டுரையை முடிக்கின்றார் மாதவைய்யார்.

இதில் ஏதில் பிணம் என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்போது, பிராமணப் பெண்ணின் முகத்தைப் பிறர் பார்க்கக் கூடாது என்பதால் ஏதில் பிணம் என்றும் அது இருட்டறையில் வைக்கப்பட்டு இருக்கும் எனவும் குறிப்பிடுகிறார்.

இக்கட்டுரைக்கு எதிர்ப்பு தெரிவித்து செந்தமிழ் இதழின் ஆசிரியர் திரு. நாராயண ஐயங்கார், அச்செந்தமிழ் இதழிலேயே சில கேள்விகளையும் எழுப்பியுள்ளார். அவை,

1. மாதவைய்யர் குறிப்பிடும் மலை நாட்டு வழக்கத்திற்கு வடமொழியிலோ, தென்மொழியிலோ நூல் ஆதாரம் ஏதேனும் உண்டா ?

2. இத்தகைய வழக்கமுடைய அந்தணர் திருவள்ளுவர் காலத்திற்கு முன்னே தமிழ்நாட்டில் குடியேறினார்களா ?

3. ஏதில் பிணம் என்பது ஆதரவற்ற அனாதைப் பிணமேயாகும். அதுமுலை முடுக்குகளில் எங்கேனும் கிடக்கலாம். காணப்படாத இடம் என்பதையே இருட்டறை என்று கூறியிருக்கலாம், என விளக்கமும் தருகிறார்.

இவரது கருத்தை ஆதரித்தும், மாதவைய்யாரின் கருத்தை மறுத்தும் மறுப்பெழுதிய பலருள் சோழவந்தான் அரசஞ்சண்முகனாரும் ஒருவர்.

**சண்முகனாரின் கருத்து**

ஆ. மாதவைய்யாரின் கருத்தை மறுக்கும் சண்முகனார் இவர் தாம் கூறும் கதைக்கு ஆதாரமாக நூற்பிரமாணம் காட்ட முடியாது. அடுத்து, இறந்தவரின் மகள் இன்னார் மகள் தான் என்று தெரியும். ஆதலால், அது ஏதில் பிணம் ஆகாது. அவர் கூறியதைப் போல் பிண விவாகம் நடந்திருக்குமானால் அதற்குத் தனியறை தேவை தானே தவிர,

இருட்டறையில் ஏதும் செய்ய இயலாது, எனக் கூறும் சண்முகனார், பொருட்பெண்டிர் என்பது காதற்பரத்தை குறிக்காது சேரிப்பரத்தையே குறிக்கும். இதனை விளக்கவே பொருள் என்ற அடைமொழியை ஆசிரியர் குறித்திருக்க வேண்டும் எனச் சொல்லி, பொய்ம்மை முயக்கம் உண்மை முயக்கம் எனச் சில எடுத்துக்காட்டுக்களையும் தருகிறார்.

வேசி குலத்தில் பிறந்திருந்தாலும் பரவை நாச்சியார் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் கொண்டது உண்மை முயக்கம் என்கிறார். இவ்வாறு சண்முகனார் மாதவைய்யரின் கருத்தைச் சொல்லுக்குச் சொல் மறுத்துரைக்கிறாரே அன்றிக் கருத்துக்களுக்குரிய மறுப்புரையாகச் சொல்ல இயலவில்லை.

இவர்களை அடுத்து வந்த உரையாசிரியர்களில் திருக்குறளுக்குத் தமிழ் மரபுரை எழுதிய பாவணர் அவர்கள் தக்க ஆதாரங்களுடன் மேற்குறித்த இருவரின் கருத்தையும், பரிமேலழகர் கருத்தையும் மறுத்துப் பாலக்காட்டு அ. மாதவைய்யரின் கருத்துக்கு ஆதரவாகச் சில நூற்பிரமாணங்களை நிறுவியிருப்பது வியப்பிற்குரிய ஒன்றாகக் காணப்படுகிறது.

**தேவநேயப் பாவாணரின் கருத்துரை**

தனித்தமிழர் இயக்கத்தைத் தன் வழியாகக் கொண்டு, அரிய கருத்துக்களைத் துணிவோடு மறுத்துரைப்பதைத் தம் வாழ்நாளில் நோக்கமெனக் கொண்டிருந்த பாவாணர் முதலில் பரிமேலழகர் கருத்தை மறுக்கிறார்.

பிணமெடுப்பார் இருட்டறைக் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும் என்னும் பரிமேலழகர் உரை பொருந்தாது. ஏனெனில் உயிர் போனபின் பேய் வந்து அண்டும் எனக் கருதிப் பிணவறையில் விளக்கேற்றி வைப்பது தமிழர் மரபு, எனக் குறிப்பிடுகிறார். அடுத்ததாக,

18, 19–ஆம் நூற்றாண்டுகளில் தென்னாட்டில் வாழ்ந்த அப்பர்துரபாஸ் என்னும் பிரஞ்ச் கிறித்துவப் பாதிரியார் தம் தாய்மொழியில் எழுதிய "இந்துப் பழக்க வழக்கங்களும் சடங்குகளும்" என்னும் நூலில் எழுதிய செய்திகளை ஆதாரமாகத் தருகிறார்.

மலையாள தேசத்தில் நம்பூதரி என்னும் தனிக்குலம் உள்ளது. இக்குலத்தில் பெண்கள் பூப்படையா முன்பு மணம் செய்து வைக்கப்படுகின்றனர். அத்தகைய பெண்கள் இறக்க நேரிடுமானால், அச்சவ உடம்பைக் கட்டாயப்புணர்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்பது கண்டிப்பான குலமரபாகும். இச்செயல் செய்யப் பெரும்பணம் கொடுத்துப் பிராமண ஆடவன் ஒருவனைக் கூலிக்கு அமர்த்துவது

உண்டாம். தங்கள் குலமரபைக் காக்கவும், பெண்ணுக்கு மறுஉலக வாழ்வு கிடைக்கவுமாக இச்செயல் செய்யப்பட்டு வந்ததாக அப்பர்நூபாஸ் குறிப்பிடுகிறார்.

இதில் மற்றொரு முறையும் உண்டு எனச்சொல்லி, திருமணம் ஆகாத, இறந்த பெண்ணின் சவ உடம்பில் அப்பெண்ணுக்கு முறைகாரனை, ஓர் உறவினனைத் தாலி ஒன்றினைக் கட்டச் செய்து, அதன் பின்னர் ஈமச்சடங்கினை செய்கின்றவழக்கமும் இருந்து இருக்கின்றது எனவும் குறிப்பிடுகின்றர்.

இச்செய்தியை ஆதாரமாகக் காட்டுகிறபாவாணர்,

1. இந்தியாவுக்கு வந்த ஆரியப் பூசாரிகள் முற்காலத்தில் பல அருவருப்பான சடங்குகளைச் செய்து வந்ததை சித்தூர் அதலாத்து கோர்ட் தீர்ப்பு என்னும் சுவடியில் கூறப்பட்டுள்ளதை ஆதாரமாக எடுத்துரைக்கிறார்.

2. திருவள்ளுவர் காலத்திற்கு முன்பேயே இவர்கள் இந்தியாவிற்கு வந்து இருக்கவேண்டும். அவர்களின் மூடப்பழக்கங்கள் ஆங்கிலேயர் காலம் வரை தொடர்ந்து இருக்கலாம் எனவும் கூறுகிறார்.

3. 'இருட்டறையில் ஏதில் பிணம் தழீஇயற்று' என்னும் திருக்குறள் உவமைக்கு அப்பர்துூபாஸ் கூற்றேசிறந்த விளக்கம் எனவும் எடுத்துரைக்கிறார்.

4. மேற்குறித்த அநாகரிகப் பழக்கங்கள் பண்டைத் தமிழரினத்தில் இல்லை எனச் சொல்லி திருவள்ளுவர் சேரநாடு சென்று இருக்கலாம் என்பதற்கு ஆதாரமாக, வெள்ளத்தனைய மலர் நீட்டம் என்னும் குறட்பாவையும் சுட்டிக் காட்டுகிறார்.

**முடிவுரை**

மேற்குறித்த குறளுக்கான கருத்துக்குத் தத்தம் நோக்கில் பலர் உரை கூறியிருப்பதும், அதனைப் பலர் மறுத்திருப்பதையும் நம்மால் அறிய முடிகிறது. ஆயினும்,

'இருட்டறையில் ஏதில் பிணம்' எனும் வள்ளுவர் எடுத்துக்கொண்ட உவமைக்கான கருத்துக்களைச் சமூகவியல் ஆய்வியல் (Socialogical Studies) மூலமாகவும், சடங்கியல் ஆய்வியல் (Ritualistic Studies) ஆய்வுகள் மூலமாகவும் கண்டறிய முற்பட்டால் இவ்வுவமைக்கான பொருளினை ஒருவாறு அறிந்து கொள்ள இயலும். அதுவரை உரையாசிரியர்கள் சொல்லுகின்றஉரைப்பொருள் தான் இதற்கான உவமைப் பொருள் எனக் கொண்டாக வேண்டும்.

❋❋❋

## தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,
**இரா. சதாசிவம்**
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

## இல்ல முகவரி

**இரா. சதாசிவம்**
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை–20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர் திரு. செ. கந்தசாமி

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,